**சார்பு நீதிமன்றம், நாங்குநேரி**

**முன்னிலை:- திரு. எம். ராமதாஸ், எம்.எல்.,**

**சார்பு நீதிபதி, நாங்குநேரி**

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ம் நாள் சனிக்கிழமை

**<u>நிறைவேற்றுதல் மனு எண்.17/2021</u>**

M/S. ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்,
அதன் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி
T. சுப்பிரமணியன் மூலம் * .... மனுதாரர்/ உரிமைகோருபவர்

// எதிர் //

1) D. மன்லின் (இறப்பு)
2) N.A. அசோக்குமார் .... எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்

** (EA.No.2/2025, நாள் - 01.11.2025 தேதியிட்ட உத்தரவுப்படி சீர்திருத்தம் செய்யப்பட்டது.)*

இந்த மனுவானது, என் முன்பு இறுதியாக 16.04.2026 அன்று விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. T. வேல்முருகன் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையிலும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. மு. அழகிய நம்பி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரையை கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

RAMADHAS Digitally signed by RAMADHAS
Date: 2026.04.18 18:11:33 +0530

## உத்தரவு

இம்மனுவில் கண்ட தொகையை மனுதாரருக்கு எதிர்மனுதாரர்களிடமிருந்து வசூலாகும் பொருட்டு மனு சொத்தை ஜப்தி செய்து, அதன்பின்னிட்டு விற்பனை செய்து, மனுவில் கண்ட தொகையை வசூலித்து தர உத்தரவிட வேண்டி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனு சுருக்கம் :-**

மனுதாரர், Arbitration No.541/2014, 24.12.2014 ல் பிறப்பிக்கப்பட்டுள்ள Award யை நிறைவேற்ற இம்மனு உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 21, விதி 43, 64 மற்றும் 66 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :-**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள நிறைவேற்றுதல் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், மனுதாரர் மனுவில் கூறியுள்ள அசல் தொகை மற்றும் வட்டி தொகை போன்றவை தவறானவை, சட்டத்திற்கு புறம்பானது என்றும், எதிர்மனுதாரர்கள் இருவரும் உறவினர்கள் ஆவார்கள் என்றும், இருவரும் கூட்டாக மேற்படி லாரி வாங்குவதற்காக மனுதாரர் நிறுவனத்தில் ரூ.5,00,000/- கடன் பெற்றுள்ளார்கள் என்றும், மாத தவணையாக மாதம் ஒன்றுக்கு ரூ.28,000/- வீதம் 9 தவணைகள் செலுத்தியுள்ளார்கள் என்றும், எதிர்மனுதாரர்கள் திருப்பி செலுத்திய தொகை ரூ.2,52,000/- ஆகும் என்றும், எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட தொழில் நஷ்டம் காரணமாக மேற்படி மனுதாரர் நிறுவனத்தின் மூலம் கடன் பெற்று வாங்கிய



RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.04.18 18:11:38 +0530

லாரியை மனுதாரரின் நிறுவனத்தில் ஒப்படைத்துவிட்டார்கள் என்றும், மனுதாரர் நிறுவனமும், எதிர்மனுதாரர்களிடம் தாங்கள் செலுத்த வேண்டிய மீதி தொகைக்கு மேற்படி தங்களது வாகனத்தை விற்று ஈடு செய்து கொள்கிறோம் என கூறியதை எதிர்மனுதாரர்களும் நம்பி இருந்து விட்டார்கள் என்றும், எதிர்மனுதாரர்கள் மேற்படி வாகனத்தை ஒப்படைக்கும் போது அசலுடன் சேர்த்து ரூ.2,70,000/- மட்டுமே செலுத்த வேண்டியது இருந்தது என்றும், மேற்படி எதிர்மனுதாரர்களின் வாகனத்தை மனுதாரர் நிறுவனம் விற்கும் போது மேற்படி வாகனம் தொகை ஈடு செய்யாத நிலையில் இருந்திருந்தால், எதிர்மனுதாரர்களுக்கு மேற்படி வாகனத்தை விற்பதற்கு முன்பு அறிவிப்பு வழங்கி இருந்திருப்பார் என்றும், அவ்வாறு எந்தவொரு அறிவிப்பும் மனுதாரரால் எதிர்மனுதாரர்களுக்கு அனுப்பப்படவில்லை என்றும், அதிலிருந்தே எதிர்மனுதாரர்களிடம் இருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மனுதாரர் செயல்பட்டுள்ளார் என்பது தெளிவாக விளங்கும் என்றும் எனவே மனுதாரரின் இந்த மனுவை, எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**4) <u>தீர்வுக்குரிய பிரச்சனை :-</u>**

இம்மனுவில் கண்ட தொகையை மனுதாரருக்கு எதிர்மனுதாரர்களிடமிருந்து வசூலாகும் பொருட்டு மனு சொத்தை ஜப்தி செய்து, அதன்பின்னிட்டு விற்பனை செய்து மனுவில் கண்ட தொகையை வசூலித்து தர உத்தரவிட வேண்டி தாக்கல்

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.04.18 18:11:45 +0530

செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? அல்லது இல்லையா? என்பதேயாகும்.

**5)** இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மேற்கண்ட Arbitration No.541/2014, 24.12.2014 ல் பிறப்பிக்கப்பட்டுள்ள Award-யை நிறைவேற்ற இம்மனு தாக்கல் செய்திருக்கும் நிலையில், மேற்கண்ட Award க்கு எதிராக எதிர்மனுதாரர்கள் மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை என்பது தெரிகிறது. எனவே, மேற்கண்ட Award எதிர்மனுதாரர்களை கட்டுப்படுத்துவதாகவே உள்ளது. எனவே எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதம் ஏற்புடையதாக இல்லை.

**6)** மேற்கண்டவற்றிலிருந்து, Award ல் கண்ட தொகையினை வசூலிக்கும் பொருட்டு 2ம் எதிர்மனுதாரரின் அசையும் சொத்தை ஜப்தி செய்து, விற்பனை செய்வது ஏற்புடையது என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே அதற்கு ஏதுவாக, மனுவில் கண்டுள்ள மனு சொத்தை ஜப்தி செய்வதற்கு ஏதுவாக இம்மனு அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**7)** முடிவாக, மனு சொத்தை ஜப்தி செய்ய உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா 11.06.2026.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.04.18 18:11:50 +0530

இன்று 2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18 ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.04.18 18:11:55 +0530

சார்பு நீதிபதி,

நாங்குநேரி

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.04.18 18:12:00 +0530

சார்பு நீதிபதி,

நாங்குநேரி

சார்பு நீதிமன்றம்

நாங்குநேரி

நிறைவேற்றல்மனு எண்.17/2021

நேரிய/வரைவு உத்தரவு

நாள் - 18.04.2026